மாகாணக் கல்வி திணைக்களம் - சபரகமுவ

வாராந்த பாடசாலை

பாடம்: இலக்கிய நயம்

வாரம் : ஆறாம் வாரம்

தரம் : 10

S. சிவலக்ஷ்மி கே/ தெஹி/ த.ம.வி எட்டியாந்தோட்டை

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. புத்தகசாலை எனும் கவிதையின் ஆசிரியர் யார்? அவரது இயற் பெயர் என்ன?
2. பாரதிதாசனின் படைப்புக்கள் எவை?
3. "தனித்தமைந்த வீட்டில் புத்தகமும் நானும் சையோகம் புரிந்ததொரு வேளை தனிலே.. இங்கு சையோகம் என்பதன் கருத்து யாது?
4. "மனிதரெல்லாம் அன்பு நெறி காண்பதற்கும் மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து.."

   அ. இவ்வடிகளில் புலப்படும் அணி யாது?

   ஆ எதனுடன் கையோகம் புரிந்ததாக கூறுகின்றார்?
5. மனிதர் எதனை காண வேண்டும் என கவிஞர் விரும்புகின்றார்?
6. "புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்.."

   அ. புத்தகசாலையால் எத்தகு வாழ்வு கிடைக்கின்றது?

   ஆ. யாண்டும் என்பதன் கருத்து யாது?
7. தமிழர்க்கு தமிழ் மொழியில் சுவடிச்சாலை சர்வகலாசாலையைப் போல் எங்கும் வேண்டும்..

   அ. சுவடிச்சாலை என்றால் என்ன?

   ஆ. சர்வகலாசாலை என்றால் என்ன?
8. கவிஞர் நாட்டில் புத்தகசாலை எங்கும் வேண்டும் எனக் கூறுவதன் காரணங்கள் யாவை?
9. புத்தகததினை நாடி வருவோரை எவ்வாறு நடாத்த வேண்டும் என கவிஞர் கூறுகின்றார்?
10. அமுதம்போல் செந்தமிழிற் கவிதை நூல்கள்.." இத்தொடரில் கையாளப்பட்டுள்ள அணி யாது? விளக்குக.